**தலைப்பு – 276**

**பதுளை மாவட்டச் செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்டச் செயலகத்தின் பணிகள்

(அ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள இணைந்த நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் கருமமாற்றுதல்.

(ஆ) அரசாங்கத்தின் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினைப் பேணிச்சென்று ஒப்படைக்கப்படும் கருமங்களை நிறைவேற்றுதல்.

(இ) அரசாங்கத்தினாலும் மாகாண சபையாலும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கான வருமானத்தினைச் சேகரித்தல்

(ஈ) மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களை ஒருங்கிணைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(உ) மாகாண சபைகளுக்குரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

(ஊ) தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்

(எ) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம் அடங்கலாக அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ஒப்படைக்கப்படும் ஏற்பாடுகளின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

(ஏ) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அடங்கலாக பல்வேறு விடயங்களிற்காக ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடாத்தல் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை பேணிச் செல்லல்

(ஐ) மாவட்டத்தின் சகல அரசாங்க, மதரீதியான மற்றும் கலாச்சார வைபவங்களை ஏற்பாடு செய்தல்.

(ஒ) சிவில் அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூகம் மற்றும் அரசாங்க நிறுவனங்களிற்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக பங்களித்தல் மற்றும் பொதுச் சமூக விடயங்களை தீர்ப்பதற்காக நடுநிலைமையுடன் செயற்படுதல்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) மஹியங்கனை

(ஆ) ரிதிமாலியத்த

(இ) கந்தகெடிய

(ஈ) மீகஹகிவுல

(உ) சொரணாதொட

(ஊ) பதுளை

(எ) பசறை

(ஏ) லுணுகல
(ஐ) ஹாலிஎல
(ஒ) எல்ல
(ஓ) பண்டாரவல
(ஔ) ஹபுதலை
(க) ஹல்துமுள்ள
(கக) வெலிமட
(கி) ஊவ பரணகம

### 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

பதுளை மாவட்டச் செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 யூன் 10 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பதுளை மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.5 இலிருந்து 1.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடும் செலவினமும்

மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 532,813,919 ஆனதுடன் ஆண்டின் இறுதியளவில் அதில் ரூபா 517,274,215 பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 15,539,704 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 2.92 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விபரம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டு வருபவை | 462,963,919 | 461,171,942 | 1,791,977 | 0.39 |
| மூலதனம் | 69,850,000 | 56,102,273 | 13,747,727 | 19.68 |
| மொத்தம் | 532,813,919 | 517,274,215 | 15,539,704 | |

#### (ii) பாதீட்டு முரண்

மூலதனச் செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 9 மில்லியன் தேறிய ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலுமொரு மூலதனச் செலவின விடயத்திற்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக ஏற்பாட்டினைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 66 சதவீதமாகக் காணப்பட்டது.

### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளின் பயன்படுத்துகை

பல்வேறு கருமங்களிற்காகவும் 23 அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்கங்களினால் ரூபா 3,303,889,541 கூட்டுத்தொகையான ஏற்பாடுகள்

மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 1,661,292,557 மற்றும் ரூபா 1,488,557,074 என்ற வகையில் ரூபா 3,149,849,631 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 139,457,117 மற்றும் ரூபா 14,582,793 என ரூபா 154,039,910 கூட்டுத்தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பு வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டில் முறையே 7.74 சதவீதமாகவும் 0.97 சதவீதமாகவும் காணப்பட்டன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை – கமநெகும நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு பிரதேச செயலகங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன.
    - மஹபிடிய பகினிதடுகொல்ல வீதியினை செப்பனிடும் செயற்திட்டத்தினை செயற்படுத்துகையில் ஏபீசீ இனை கொண்டு சென்று பதிப்பதற்காக 43.85 சதுர மீற்றர்கள் மேலதிகமாக அளவீடு செய்திருந்தமையால் ரூபா 92,173 தொகை ஒப்பந்தகாரச் சங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

    - பெதியாகொட திரியகம சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் போது கட்டிடத்தின் கூரையை நிர்மாணிப்பதற்கும் மரச்சட்டங்களைக் கொண்டு கதவுகளைப் பொருத்துவதற்காகவும் உரிய தரத்திலான மரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த நிர்மாண நடவடிக்கைகளிற்காக ரூபா 248,564 தொகை குறித்த ஒப்பந்தகாரச் சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

    - கெசல்பொத வடக்கில் இடிந்த நிலையில் காணப்படுகின்ற கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தினை புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டத்தின் போது கூரையினை நிர்மாணிப்பதற்காக பழைய கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்ட மரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 190,552 தொகையும் கற் சுவர்களை கட்டுவதற்கும் மரச்சட்டங்கள் மற்றும் கதவுகளைப் பொருத்துவதற்காகவும் முறையே ரூபா 49,266 மற்றும் ரூபா 15,984 தொகையும் ஒப்பந்தகாரச் சங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

    - சியம்பலாகஸ்லந்த, கொங்கொல்ல வீதியை செப்பணிடல் செயற்திட்டத்தின் போது மூல மதிப்பீட்டின் படி நிர்மாணிக்கப்பட

வேண்டிய இரண்டு மதகுகளிற்குப் பதிலாக பிரதேச சபை உறுப்பினரின் கோரிக்கையின் படி ஒரு மதகு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு மற்றைய மதகினை நிர்மாணிப்பதற்குப் பதிலாக ரூபா 532,232 மண் வேலைகள் செய்யப்பட்டிருந்தன.

- பிடமாருவ பாடசாலைக்குச் செல்லும் வீதியின் இறுதி 19 மீற்றரை கொங்ரீட் செய்கையில் உரிய தரத்தில் நிர்மாணிக்கப் படாதிருந்ததுடன் 03 இடங்களில் வீதியில் வெடிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. இந்த வீதியை நிர்மாணிப்பதற்காக குறித்த ஒப்பந்தகாரச் சங்கத்திற்கு ரூபா 604,610 செலுத்தப்பட்டிருந்தது.

- ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தினால் 2011 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு இளைஞருக்கு ரூபா 6,500 வீதம் 64 இளைஞர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 416,000 தொகை இலங்கை போக்குவரத்துச் சபையின் மஹியங்கனை டிப்போவிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. பிரதேசத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் தேவையான இளைஞர்களை முறைப்படி இனங்கண்டு கொள்ளாது பயிற்சியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் பயிற்சியினைப் பூரணப்படுத்தி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொண்டிருந்தோர் எண்ணிக்கை 29 ஆகக் காணப்பட்டது. எஞ்சிய 35 நபர்களுக்கு சாரதிப் பயிற்சினை வழங்குவதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 227,500 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27601 | 43,000,000 | 37,548,375 | 31,500,000 | 38,778,145 | 155,000,000 | 122,530,367 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 27601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 5,337,256 கூட்டுமொத்தமாக இருந்தது.

(ii) பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ள 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 519,104 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 255,797 ஆன மீதிகள் 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட பழமைவாய்ந்த மீதிகளாகும். கடன் மீதியினையும் அதற்குரிய வட்டியினையும் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஹல்தும்முல்ல பிரதேச செயலாளராக கடமையாற்றி பதவி வறிதாக்கப்பட்ட முன்னாள் பிரதேச செயலாளரிடமிருந்து அறவிடவேண்டிய ஆதன, வாகன மற்றும் இடர் கடன் மீதிகளான ரூபா 1,096,080 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மஹியங்கனை முன்னாள் பிரதேச செயலாளர் 1999 ஒக்தோபர் 31 ஆந் திகதி பதுளை மாநகர சபையின் மாநகர ஆணையாளராக இடமாற்றம் பெற்றுச் செல்கையில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 242,373 கடன் மீதியினை அறிவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **பொதுவைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் பொதுவைப்புக் கணக்கின் மீதி ரூபா 507,372,544 மொத்தமாகக் காணப்பட்டது. அந்த மீதியினுள் காணப்பட்ட 02 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட ரூபா 2,718,790 ஆன வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

**குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

சொரணாதொட பிரதேச செயலகத்தில் 2012 ஆகஸ்ட் 25 ஆந் திகதி முதல் சாரதிப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டமையால் குழாம் வாகனமொன்று குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | - | தாபன விதிக்கோவையின் பிரகாரம் சம்பளத்திலிருந்து சதவீதமாக வதிவிட வாடகையினை அறவிடுவதற்குப் பதிலாக மாவட்டச் செயலாளரின் அங்கீகாரமின்றி 2006 இன் விலை மதிப்பீட்டின் படி கணக்காளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகியோரின் உத்தியோகபூர் வதிவிட வாடகையாக சிக்கன வாடகை அறவிடப்பட்டிருந்தது. |
| XIX ஆம் அத்தியாயத்தின் 06 ஆம் பந்தி | - | ரிதீமாலியத்த மற்றும் எல்ல பிரதேச செயலகங்களின் 03 உத்தியோகபூர்வ இல்லங்களினதும் தொடர்புடைய ஆதனங்களினதும் ஒப்படைத்தல் உரிய முறையில் நிபந்தனைகளுடன் கூடிய உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| நிதிப்பிரமாணம் 1645(அ) | 529,461 | கன்தகெடிய, சொரணாதொட, வெலிமடை மற்றும் ஊவா பரணகம பிரதேச செயலகங்களின் வாகனத் திருத்தங்களை உள்ளடக்கி வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

## 1.8 செயற்திட்டங்களை அமுலாக்கலில் உள்ள நலிவுகள்

### (அ) தொடங்கப்படாது கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்திருக்க வேண்டிய திகதி | தொடங்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| சமகிபுர டெனிஸ்லன்ட படிக்கட்டுக்களைத் திருத்துதல் | 48,860 | 2013.09.18 | குறித்த சங்கத்தினால் நிறைவேற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை |
| உடுபுஸ்ஸல்லாவ கம்பஹவத்த மேற்பகுதி விளையாட்டு மைதானத்தினை சமப்படுத்தி வேலியினை திருத்தியமைப்பதற்காக பொருட்களை வழங்குதல் | 29,100 | - | அருகிலுள்ள காணி உரிமை யாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமை |
| ஹிந்தகல தோட்டப் பகுதியின் கலுகல கலாசார நிலையத்தினை அபிவிருத்தி செய்தல் | 300,000 | - | ஆரம்பத்தில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிரிந்த உடுவர மேற்பகுதியில் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் பிரேரணை மாற்றப் பட்டமையால் அப்பகுதியிலுள்ள தோட்ட மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமை |
| அரவாகும்புர ஸ்ரீ விஜித சம்போதி விஹாரையின் சிலையினை நிர்மாணித்தல் | 100,000 | 2013.12.31 | குறித்த ஒப்பந்தத்திற்காக உடன்படிக் கையில் கைச்சாத்திடுவதற்கு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று முன்வந் திருக்காமை |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | தொடங்கப் பட்ட திகதி | முடிவுறுத்தப் பட வேண்டிய திகதி | முடிவுறுத் தப்பட்ட திகதி | 2013திசெம்பர் 31 வரையான செலவினம் | தாமதத்திற் கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| **பசறை பிரதேச செயலகம்** | ரூபா | | | | ரூபா | |
| ப/கனவரெல்ல 1 ஆம் இலக்க வித்தியாலயத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் | 500,000 | 2013.04.09 | 2013.06.06 | 2013.07.08 | 349,725 | அதிக மழை |
| ப/கனவரெல்ல 2 ஆம் இலக்க வித்தியாலயத்தில் 20x20 வகுப்பறை யொன்றை நிர்மாணித்தல் | 500,000 | 2013.04.09 | 20132.06.05 | 2013.06.05 | 300,883 | மோசமான காலநிலை மற்றும் போக்குவரத்துப் பிரச்சினை |
| ப/கனவரெல்ல 3 ஆம் இலக்க வித்தியாலயத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் | 500,000 | 2013.04.05 | 2013.06.05 | 2013.07.15 | 490,620 | மோசமான காலநிலை |
| **ஹாலிஎல பிரதேச செயலகம்** | | | | | | |
| வெல்லேவெல மெதமங்கட வீதியை அபிவிருத்தி செய்தல் | 99,900 | 2013.07.30 | 2013.09.14 | 2013.09.26 | 99,864 | உடன்படிக் கையில் கைச்சாத்திட்ட சங்கத் தினால் வேலையை பூரணப்படுத்த தாமதித்தமை |
| வேவல்ஹின்ன பிரிவின் ஓதம்பெவத்த 11 பகுதியில் அலுவலக வீதியை கொங்றீட் செய்தல் | 52,757 | 2013.09.25 | 2013.10.16 | 2013.12.14 | 50,000 | |
| உடுவர மூகுனுமத அம்பிடிகந்த வரையான வீதியின் ஆரம்பப் பகுதியினை புனரமைத்தல் | 71,956 | 2013.10.30 | 2013.11.20 | 2013.12.26 | 71,956 | |
| ஹாலிஎல ஜயதிலக மாவத்த முதலாவது நுழைவு வீதியினை கொங்றீட் செய்தல் | 51,867 | 2013.09.10 | 2013.10.10 | 2013.10.24 | 50,000 | |

**வெலிமடை பிரதேச செயலகம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஊவா பென்ஹட் வெலிமடை பகுதியில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கலாசார நிலையத்தினை அபிவிருத்தி செய்தல் | 294,000 | 2013.12.09 | 2013.12.28 | - | 79,856 | கட்டிடமொன்றை நிர்மாணிக் கையில் கொங்ரீடினை பொருத்துவதற்கு போதியளவு காலம் இல்லாமை |
| ஓஹிய எல்ட் வீதியை கொங்ரீட் செய்தல் | 1,000,000 | 2013.12.23 | 2012.12.31 | - | - | மோசமான காலநிலை |

**ஊவா பரணகம பிரதேச செயலகம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கர்கில்ஸ் பெகின்டன் பகுதி வீதியை கொங்ரீட் செய்தல் | 1,000,000 | 2013.12.26 | 2013.12.31 | - | 306,344 | ஆண்டின் இறுதியில் நிதி ஏற்பாடு கிடைத்தமை யால் பூர்த்திசெய்வ தற்கு காலம் போதாமை |
| துபேவத்த வோல்ட்மார் பகுதி கலாசார வீதியை அபிவிருத்தி செய்தல் | 300,000 | - | 2013.12.31 | - | - | |

**(இ) மதிப்பீடுகளைத் தயாரித்தல்**

2011 ஆம் ஆண்டு முதல் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்குதல் தொடர்பான 2011 செப்தெம்பர் 02 ஆந் திகதிய MED/RE ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தல்கள் கையேட்டின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மொத்த மதிப்பீட்டின் மீது 20 சதவீதத்திற்கு மேற்படாத தொகை பயிற்றுவிக்கப்படாத ஊழியத்திற்காக கழிக்கப்படுத்தல் வேண்டும். அந்த ஏற்பாட்டினைக் கருத்திற் கொள்ளாது செயற்திட்டத்தினை செயற்படுத்தும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தத்தக்க உச்ச தொகையின் மீது 20 சதவீதத்திற்கு மேற்படாத தொகை பயிற்றுவிக்கப்படாத ஊழியமாக மதிப்பிடப்பட்டிருந்தமையால் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட பயிற்றுவிக்கப்படாத ஊழியம் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.

**(ஈ) தாமதக் கட்டணங்கள் குறைவாக அறவிடப்பட்டிருத்தல்**

(i) கந்தகெடிய பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த 09 கமநெகும செயற்திட்டங்களிலிருந்து கழிக்கப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 65,828 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டில் மீகஹகிவுல பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம் என்ற 20 செயற்திட்டங்களில் 11 செயற்திட்டங்கள் உடன்படிக்கையிடப்பட்ட காலத்தில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. முறையற்ற விதத்தில் உடன்படிக்கையிடப்பட்ட காலப்பகுதி மாற்றப்பட்டிருந்தமை காரணமாக கழிக்கப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 177,625 இனை அறவிடுதல் தவிர்க்கப்பட்டிருந்தது.

**1.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலங்களால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த சீராக்கல்கள் மீதான பகுப்பாய்வின் படி 6 மாதத்திற்கு மேல் 1 ஆண்டிற்கு குறைந்த காலமாக நிலவிவரும் ரூபா 15,857 மொத்தமான வசூலிக்கப்படாத காசோலைகள் காணப்பட்டன.

**1.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ வாகனம் 2013 சனவரி முதல் 2013 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் 12,606 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்தது. அந்த தூரத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய எரிபொருள் அளவு 1,575.5 லீற்றர்களாகும். நுகரப்பட்ட எரிபொருளின் அளவு 1,872.62 லீற்றர்களாக காணப்பட்டமையால் தேவையான அளவினைக் காட்டிலும் ரூபா 36,040 பெறுமதியான 297.12 லீற்றர் எரிபொருள் கூடுதலாக நுகரப்பட்டிருந்தது.

**1.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2013 ஏப்ரல் 09 ஆந் திகதி ஊவா பரணகம பிரதேச செயலகத்தின் ரூபா 634,250 பெறுமதியான கொள்வனவுகள் தொடர்பில் வழங்குனர் ஒருவர் கொள்வனவுச் சபையால் தெரிவுசெய்யப்பட்டதாக குறிப்பிட்டு அந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அத் தீர்மானத்தை மேற்கொண்ட கொள்வனவுச் சபையின் தலைவராகச் செயற்பட்டிருந்த பிரதேச செயலாளர் மற்றும் அதன் உறுப்பினர்களில் ஒருவரான தொழில்நுட்ப உத்தியோகத்தர் அன்றைய தினம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 8.35 மணி வரை வெளிக்கள பணிகளில் ஈடுபட்டிருந்தமையால் அன்றைய திகதியிலான கொள்வனவுச் சபைத் தீர்மானம் பொய்யானதாக காணப்பட்டது.

**1.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---

ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு ஏற்பாட்டின் கீழ் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்காக கைப்பந்தாட்ட மைதானமொன்றை அமைப்பதற்கு ரூபா 50,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் கைப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்ட இடத்தில் 2013 நவம்பர் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையில் குறித்த இடத்தில் விளையாட்டு மைதானமொன்று இல்லாதிருந்ததுடன் மகாவலி அதிகாரசபையினால் அந்த இடத்தில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வந்தது.

**1.13 முகாமைத்துவ பலவினங்கள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சொரணாதொட பிரதேச செயலகத்தின் குழாம் வாகனத்தில் மைலோ மீற்றர் மானி 2012 யூன் 20 ஆந் திகதி முதல் செயலிழந்திருந்த போதிலும், அதனைத் திருத்துவதற்கோ அல்லது புதிதாக மானியொன்றைப் பொருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை காரணமாக நாளாந்த ஓட்டக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்த எரிபொருள் அளவு மற்றும் ஓடப்பட்ட கிலோ மீற்றர் எண்ணிக்கை தொடர்பில் திருப்திப்பட முடியாதிருந்தது.

(ஆ) கந்தகெடிய பிரதேச செயலகத்தின் குழாம் வாகனத்தில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் பரிசோதனைக்கமைய ஒரு லீற்றர் டீசலின் மூலம் ஓடப்படக் கூடிய கிலோமீற்றர் எண்ணிக்கை 8 ஆன போதிலும், குறித்த வாகனத்தின் ஓட்டக் குறிப்பு ஒரு லீற்றர் டீசலிற்கு 07 கிலோ மீற்றராக சமப்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி 2013 சனவரி 08 முதல் 2014 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை ஓடப்பட்ட 16,044 கிலோ மீற்றருக்காக 286.5 லீற்றர் எரிபொருளுக்கு ரூபா 34,781 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.